| மந்தனம் | ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பார்வைக்கு மட்டும் |
|---|---|

# பெரியார் பல்கலைக்கழகம்

தேசிய தரமதிப்பீட்டுக்குழுவின் மறுமதிப்பீட்டில் "A" தரச்சான்றிதழ் பெற்றது

**பெரியார் பல்கலை நகர்**

**சேலம் - 636 011**

## 92-ஆவது ஆட்சிக்குழுக் கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பு (Minutes of the Meeting)

**நாள்: 17.12.2016, நேரம்: காலை 11.00 மணி**

**இடம்: ஆட்சிக்குழுக் கூடம், பெரியார் பல்கலைக்கழகம், சேலம் - 11.**

- தமிழகத்தின் முதலமைச்சராக தொடர்ந்து ஆறு முறை பதவி வகித்த **மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள்** உடல்நலக்குறைவின் காரணமாக **05.12.2016 இயற்கை எய்தியமைக்காக அம்மையாருக்கு ஆட்சிக்குழுவினர் அஞ்சலி செலுத்தும் விதமாக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.**

- தமிழகத்தின் முதலமைச்சராக தொடர்ந்து ஆறு முறை பதவி வகித்த, அனைவராலும் அம்மா என்று அன்புடன் அழைக்கப்பட்ட **மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள்** உடல்நலக்குறைவின் காரணமாக **05.12.2016** அன்று இரவு 11.30 மணிக்கு இயற்கை எய்தினார். தமிழகத்தின் உயர்கல்விதுறை வளர்ச்சிக்காக பல்வேறு சிறப்பு திட்டங்களை தீட்டி அனைவருக்கும் உயர்கல்வி என்கின்ற தொலைநோக்கு சிந்தனையில் Vision 2023 என்கின்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி அதனை எய்தும் நோக்கில் அயராது பாடுபட்டு வந்தார். அம்மையாரது மரணம் தமிழகத்திற்கும் உயர்கல்வித்துறைக்கும் பேரிழப்பாகும். எனவே, பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர், பதிவாளர், ஆட்சிக்குழு, ஆட்சிப்பேரவை, அனைத்து நிலைக்குழுக்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் மாணாக்கர்கள் சார்பாக ஆட்சிக்குழு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவிக்கின்றது.

**இனம் 1** **05.10.2016 அன்று நடைபெற்ற இணைவுக்குழுக் கூட்ட பொருள்நிரல் மற்றும் தீர்மானங்களுக்கு ஆட்சிக்குழுவின் பின்னேற்பு அனுமதி வேண்டுதல் - சார்பாக.**

**குறிப்பு:**

05.10.2016 அன்று காலை 11.00 மணிக்கு பெரியார் பல்கலைக்கழக IQAC கூடத்தில் நடைபெற்ற இணைவுக்குழுக்கூட்டத்தின் தீர்மானங்கள் ஆட்சிக்குழுவின் பின்னேற்பு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகின்றன.

**தீர்மானம்:**

**ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved).**

**இனம் 2** **11.11.2016 அன்று நடைபெற்ற கொள்முதல் குழுக் கூட்ட பொருள்நிரல் மற்றும் தீர்மானங்களுக்கு ஆட்சிக்குழுவின் பின்னேற்பு அனுமதி வேண்டுதல் - சார்பாக.**

**குறிப்பு:**

11.11.2016 அன்று மாலை 03.00 மணிக்கு பெரியார் பல்கலைக்கழக IQAC கூடத்தில் நடைபெற்ற கொள்முதல் குழக்கூட்டத்தின் தீர்மானங்கள் ஆட்சிக்குழுவின் பின்னேற்பு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகின்றன.

**தீர்மானம்:**

**ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved).**

**இனம் 3** **22.11.2016 அன்று நடைபெற்ற PRIDE குழுக் கூட்ட பொருள்நிரல் மற்றும் தீர்மானங்களுக்கு ஆட்சிக்குழுவின் அனுமதி வேண்டுதல் தொடர்பாக.**

குறிப்பு:

பெரியார் பல்கலைக்கழக PRIDE குழுவின் கூட்டம் கடந்த 22.11.2016 அன்று காலை 11.00 மணிக்கு பெரியார் பல்கலைக்கழக IQAC கூடத்தில் நடைபெற்றது. PRIDE குழக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் மீது ஆட்சிக்குழுவின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது.

**தீர்மானம்:**

**ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved).**

**இனம் 4** **பல்கலைக்கழக மானியக்குழுவின் 12-ஆவது நிதித்திட்டத்தின் கீழ் (UGC XII Plan) அமைக்கப்பட்டுள்ள மகளிரியல் (Women's Studies Centre) மையத்திற்கு முற்றிலும் தற்காலிமாக தொகுப்பூதியத்தின் அடிப்படையில் ஆசிரியர் மற்றும் நிர்வாக பணியிடங்கள் 22.09.2016 முதல் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டமைக்கு – ஆட்சிக்குழுவின் பின்னேற்பு ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக.**

குறிப்பு:

பெரியார் பல்கலைக்கழகத்திற்கு பல்கலைக்கழக மானியக்குழுவின் 12-ஆவது நிதிநல்கையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மகளிரியல் (Women's Studies Centre) மையத்திற்கு முற்றிலும் தற்காலிமாக தொகுப்பூதியத்தின் அடிப்படையில் ஆசிரியர் மற்றும் நிர்வாக பணியிடங்களை (Tenure Post) நிரப்புவதற்கு 13.07.2016 அன்று நடைபெற்ற 90-ஆவது ஆட்சிக்குழுவின் இனம் 23-இல் நிரப்பப்படாமல் உள்ள பணியிடங்களுக்கு மீண்டும் விண்ணப்பம் வரவேற்று விளம்பரம் செய்திட ஒப்புதல் வழங்கியதையடுத்து மகளிரியல் (Women's Studies Centre) மையத்திற்கு நிரப்பப்படாமல் இருந்த கீழ்க்கண்டுள்ள பணியிடங்களுக்கு விளம்பரம் வெளியிட்டு விண்ணப்பம் பெற்று, அவற்றை தகுதியுள்ள பாடவல்லுநர்களைக் கொண்டு 30.08.2016 அன்று கூர்ந்தாய்வு செய்யப்பட்டது.

**Teaching Staff:** Research Associate– 01 (GT).

**Non-Teaching Staff:**

Research Assistant–01 (GT), Professional Assistant–01 (GT),

Data Entry Operator – 01 (GT), Attendant – 01 (GT).

பல்கலைக்கழக சாசன விதிகளில் ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றியும், தொகுப்பூதிய நிர்வாகப் பணியிடங்களை நிரப்புவதற்கு என விதிமுறைகள் இல்லாத காரணத்தினால், நிர்வாகப் பணியிடங்களான கிரேடு-டி பணியிடங்களை நிரப்புவதற்கு தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றியும் பல்கலைக்கழக மானியக்குழுவின் ஆணையில் தெரிவித்துள்ளவாறு நேர்காணல் குழுவில் மகளிரியல் பாட வல்லுநர் ஒருவரை இடம்பெறச்செய்து, நேர்காணல் குழு அமைத்து, கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்த தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு 12.09.2016 அன்று நேர்காணல் நடைபெற்றது.

நேர்காணல் குழுவின் பரிந்துரையின்படி பெரியார் பல்கலைக்கழக மகளிரியல் (Women's Studies Centre) மையத்திற்கு கீழ்க்கண்டுள்ள அட்டவணையில் கண்டுள்ளவாறு 22.09.2016 முதல் பணியாளர்கள் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டமைக்கு ஆட்சிக்குழவின் பின்னேற்பு ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

| Name of the Post | Roster | Names of the Candidates appointed as per the recommendation of the Selection Committee |
|---|---|---|
| **Teaching Staff:**<br>Research Associate | 01 (GT) | Dr. S . Dhanalakshmi |
| **Non-Teaching Staff:** | | |
| Research Assistant | 01 (GT) | Ms. T. Kowsalya |
| Professional Assistant | 01 (GT) | Ms. K. Vanitha |
| Data Entry Operator | 01 (GT) | Ms. S. Kavitha |
| Attendant | 01 (GT) | Mrs. G.. Sathya |

**தீர்மானம்:**

**ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved).**

**இனம் 5** **பல்கலைக்கழக மானியக்குழுவால் தெரிவிக்கப்பட்டுள்ள முனைவர் பட்டம் மற்றும் ஆய்வியல் நிறைஞர் நெறியாளர்களுக்கு சேர்க்கைபெறும் மாணவர்களின் எண்ணிக்கை குறித்து விதிமுறைகள் 2016-ஐ பெரியார் பல்கலைக்கழகம் மற்றும் இணைவு பெற்ற கல்லூரிகளுக்கு நடைமுறைப்படுத்துவது தொடர்பாக.**

குறிப்பு:

பெரியார் பல்கலைக்கழக துறைகள் மற்றும் இணைவு பெற்ற கல்லூரிகளில் பணியாற்றிவரும் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டள்ள முனைவர் பட்ட ஆய்வு நெறியாளர்கள் (Ph.D. Research Guides) ஒரே சமயத்தில் எட்டு ஆய்வு மாணவர்களுக்கு முனைவர் பட்ட ஆய்வு நெறியாளராக செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பல்கலைக்கழக துறைகள் மற்றும் இணைவு பெற்ற கல்லூரிகளில் ஆய்வியல் நிறைஞர் நெறியாளர்களாக (M.Phil. Research Guides) செயல்பட அங்கீகாரம் பெற்றுள்ளவர்கள் தலா ஐந்து மாணவர்களுக்கு ஆய்வு நெறியாளர்களாக செயல்படலாம் எனவும், ஆய்வியல் நிறைஞர் மாணவர்களுக்கு வழிகாட்டியாக செயல்பட ஆய்வியல் நிறைஞர் கல்வித்தகுதி (Pass in M.Phil. Degree) பெற்றிருந்தால் போதுமானது எனவும் அறிவிக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகின்றது.

இந்நிலையில், மனிதவள மேம்பாட்டுத் துறையின் கீழ் இயங்கிவரும் பல்கலைக்கழக மானியக்குழவானது, முனைவர் பட்டம் மற்றும் ஆய்வியல் நிறைஞர் குறித்து வகுத்துள்ள குறைந்த பட்ச தரம் (Minimum Standards and Procedures for Award of M.Phil. / Ph.D. Degrees) மற்றும் வழிமுறைகள் 2016-இல் கீழ்க்கண்டுள்ளவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**6. Allocation of Research Suprvisor:**

6.5. A Research Supervisor / Co-suprvisor who is a Professor, at any given point of time, cannot guide more than three M.Phil. and Eight Ph.D. Scholars. An Associate Professor as Research Supervisor can guide up to a maximum of two M.Phil. and Six Ph.D. scholars and an Assistant Professor as Research Supervisor can guide up to a maximum of one M.Phil. and four Ph.D. Scholars.

பல்கலைக்கழக மானியக்குழவால் வெளியிடப்பட்டுள்ள புதிய விதிமுறைகளை பெரியார் பல்கலைக்கழகத்தில் நடைமுறைப்படுத்துவது குறித்து ஆட்சிக்குழுவின் ஆலோசனை வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது.

**தீர்மானம்:**

**ஒத்திவைக்கப்பட்டது (Deferred). பல்கலைக்கழக மானியக்குழுவின் விதிமுறைகள் 2016-ன் சரத்துக்களை ஆய்வு செய்ய ஆட்சிக்குழுவின் துணைக்குழு கீழ்க்கண்டுள்ள நபர்களைக் கொண்டு அமைத்து அக்குழுவின் பரிந்துரையினை ஆட்சிக்குழுவில் சமர்ப்பிக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.**

1. **முனைவர் R. பழனிவேல்**
2. **முனைவர் A. முத்துசாமி**
3. **முனைவர் S. ஆறுமுகம்**

**இனம் 6** **பெரியார் பல்கலைக்கழகத் துறைகள் மற்றும் இணைவுப்பெற்ற கல்லூரி வாயிலாக முனைவர் பட்டப் பதிவு செய்து ஆய்வு மேற்கொண்டு வாய்மொழித்தேர்வு (Viva Voce Examination) முடித்துள்ள முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கு, முனைவர் பட்ட கடிதம் (Ph.D. Degree Award Letter) வழங்கியமைக்கு ஆட்சிக்குழுவின் பின்னேற்பு அனுமதி வேண்டுதல் தொடர்பாக.**

குறிப்பு:

பெரியார் பல்கலைக்கழகத் துறைகள் மற்றும் இணைவுபெற்ற கல்லூரிகளின் வழியாக முனைவர் பட்டப் பதிவு செய்து ஆய்வு மேற்கொண்டு வாய்மொழித்தேர்வினை (Viva Voce Examination) முடித்துள்ள கீழ்க்காணும் பட்டியலில் உள்ள 25 முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும், துணைவேந்தர் அவர்களின் அனுமதி பெற்று Ph.D. Degree Award Letter வழங்கப்பட்டுள்ளது.

| S.No. | Name of the Subject | Name of the Candidate | Viva-Voce Date |
|---|---|---|---|
| 1. | Commerce | K.Senthilkumar | 06.10.2016 |
| 2. | Management | V.Ramachandran | 05.10.2016 |
| 3. | Education | N.Sridhar | 03.10.2016 |
| 4. | Biotechnology | S.Karthi | 07.10.2016 |
| 5. | Physics | D.Sakthi | 07.10.2016 |
| 6. | Biotechnology | P.Prasath | 18.10.2016 |
| 7. | Mathematics | T.Govindan | 18.10.2016 |
| 8. | Tamil | M.Pargunan | 07.10.2016 |
| 9. | Commerce | C.Kandasamy | 07.10.2016 |

| | | | |
|---|---|---|---|
| 10. | English | D.Indumathi | 14.10.2016 |
| 11. | Mathematics | A.Kavitha | 26.10.2016 |
| 12. | Computer Science | V.Shyamala Devi | 25.10.2016 |
| 13. | English | R.Brindadevi | 31.10.2016 |
| 14. | English | M.Krishnaraj | 21.10.2016 |
| 15. | Tamil | M.Nagarajan | 31.10.2016 |
| 16. | Commerce | C.Indirani | 31.10.2016 |
| 17. | Microbiology | A.Sureshbabu | 04.11.2016 |
| 18. | Commerce | R.Brinda Shree | 25.10.2016 |
| 19. | Mathematics | R.Saravanan | 25.10.2016 |
| 20. | Tamil | M.Jagathambal | 03.11.2016 |
| 21. | Commerce | A.Ignatius | 01.11.2016 |
| 22. | Commerce | P.Sakthivel | 01.11.2016 |
| 23. | Biochemistry | P.Ratha | 04.11.2016 |
| 24. | Tamil | D.Venkatesan | 08.11.2016 |
| 25. | Management | M.Maruthamuthu | 20.10.2016 |

சான்றிதழ் வழங்கப்பட்டமைக்கு ஆட்சிக்குழுவின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**தீர்மானம்:**

**ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved).**

**இனம் 7** **பெரியார் பல்கலைக்கழக இணைவுப்பெற்றக் கல்லூரிகள் மற்றும் பெரியார் பல்கலைக்கழகத்துறைகளில் கீழ்க்கண்ட பட்டியலில் உள்ள முனைவர் பட்டம் பெற்ற ஆய்வாளர்களின் ஆய்வேட்டினை நூலாக வெளியிடுவதற்கு அனுமதி வழங்குவதற்கு ஆட்சிக்குழுவின் ஒப்புதல் வேண்டுதல் தொடர்பாக.**

குறிப்பு:

முனைவர் பட்ட ஆய்வேட்டினை நூலக வெளியிட அனுமதி கோரிய ஆய்வாளர்களது விபரம்.

| வ எண் | ஆய்வாளர் பெயர் | நெறியாளர் பெயர் | பாடம் | ஆய்வு மேற்கொண்ட கல்லூரி/பல்கலைக்கழகத் துறை |
|---|---|---|---|---|
| 1 | முனைவர் V.K. இவாஞ்சலின் | முனைவர் D. நடராஜன் | உயிர் தொழில்நுட்பவியல் துறை, முழுநேரம் | பெரியார் பல்கலைக்கழகம், சேலம், உயிர்தொழில்நுட்பவியல் துறை |
| 2 | முனைவர் தீ.சண்முகப்பிரியா | முனைவர் N.பழனிவேலு | தமிழ் துறை, பகுதிநேரம் | அரசு ஆடவர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி, தமிழ் துறை, |
| 3 | முனைவர் R.முபீன் | முனைவர் M.வாசன் | வணிகவியல் துறை, முழுநேரம் | கே.எஸ்.ஆர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாமக்கல் |
| 4 | முனைவர் C.கோவிந்தராஜ் | முனைவர் V.குந்தவி | ஆங்கிலத் துறை, பகுதிநேரம் | அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), சேலம் - 7. |
| 5 | முனைவர். K.முனுசாமி | முனைவர் K.மருதமுத்து | வணிகவியல் துறை, முழுநேரம் | பெரியார் பல்கலைக்கழகம், சேலம் - 636 011. |
| 6 | முனைவர் சு.இராஜா | முனைவர் இரா. வசந்தமாலை | தமிழ்த் துறை, முழுநேரம் | பெரியார் பல்கலைக்கழகம், சேலம் - 636 011. |
| 7 | முனைவர் C.சுரேஷ் குமார் | முனைவர் R.சுப்ரமணி | இதழியல் மற்றும் மக்கள்தொடர்பியல், துறை, பகுதிநேரம் | பெரியார் பல்கலைக்கழகம், சேலம் - 636 011. |
| 8 | முனைவர் M.வடிவேல் | முனைவர் C.உமாராணி | வேதியியல் துறை, பகுதிநேரம் | பெரியார் பல்கலைக்கழகம், சேலம் - 636 011. |
| 9 | முனைவர் அ.திலகவதி | முனைவர் N.பழனிவேலு | தமிழ்த் துறை, பகுதிநேரம் | அரசு ஆடவர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி, தமிழ் துறை, |
| 10 | முனைவர் A.கண்ணல் | முனைவர் ஐ.பிரேமலதா | தமிழ்த் துறை, பகுதிநேரம் | அரசு கலைக் கல்லூரி, தருமபுரி – 5. |
| 11 | முனைவர் இரா.இராமகிருஷ்ணன் | முனைவர் வே.வேலுமணி | தமிழ்த் துறை, பகுதிநேரம் | ஏம.ஜி.ஆர் கல்லூரி, ஒசூர் |
| 12 | முனைவர் ப.புவனேஸ்வரி | முனைவர் சு.நிர்மலா | தமிழ்த் துறை, பகுதிநேரம் | அரசு கலைக் கல்லூரி, தருமபுரி – 5. |
| 13 | முனைவர் G.ராதிகா | முனைவர் V. பாலாஜி | வணிகவியல் துறை, பகுதிநேரம் | சேலம் சௌடேஸ்வரி கல்லூரி, சேலம் - 10. |

ஆய்வேட்டினை நூலாக வெளியிடுவது குறித்து பெரியார் பல்கலைக்கழக முனைவர் பட்ட விதி 2005-இல் பக்கம் 20-இல் பத்தி (IX)-இல் Publication of thesis என்ற தலைப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

*"A thesis, whether approved or not, shall not be published without the permission of the Syndicate and the syndicate may grant permission for the publication under such conditions as it may impose.*

*Provided that a candidate may, during the course of his/her research, publish papers in standard research journals, as advised by his/her supervisor, but the thesis as a whole shall not be published without obtaining permission of the Syndicate mentioned supra.*

*Permission for publication of the thesis should be made within five years after the award of the degree".*

ஆகவே, பட்டியலில் உள்ள பதிமூன்று ஆய்வாளர்களின் ஆய்வேட்டினை நூலாக வெளியிட அனுமதி வழங்குவதற்கு ஆட்சிக்குழுவின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**தீர்மானம்:**
**ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved).**

**இனம் 8** **பெரியார் பல்கலைக்கழக பாதுகாவல் பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்வதற்கு M/s. Southern Security Guard Agency நிறுவனத்திற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக.**

**குறிப்பு:**
பெரியார் பல்கலைக்கழக பாதுகாவல் பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டுவரும் நிறுவனத்திற்கான ஒப்பந்த காலம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, ஒப்பந்த அடிப்படையில் பாதுகாவல் பணியினை மேற்கொள்ள ஏதுவாக தற்போது பாதுகாவல் பணியினை மேற்கொண்டுவரும் நிறுவனங்களிடமிருந்தும், முன்னாள் இராணுவத்தனரிடமிருந்தும் விலைப்புள்ளிகள் கோரி நாளிதழ்களிலும், பல்கலைக்கழக இணைய தளத்திலும் விளம்பரம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பெறப்பட்ட 34 ஒப்பந்தப் படிவங்களை கடந்த 07.10.2016 அன்று நடைபெற்ற குழுவின் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டு, விதிமுறைகளில் உள்ள சரத்துக்களை முழுமையாக (இணைப்பு:-1) M/s. Southern Security Guard Agency, 71-D-4, VRG, Complex, Junction Main Road, Subramania Nagar 1st Gate, Salem- 5 Phone: 0427-2448314 என்ற நிறுவனம் பூர்த்தி செய்துள்ளமையால், அந்நிறுவனத்தை நேரில் அழைத்து, அந்நிறுவனம் தெரிவித்துள்ள விலைப்புள்ளியில் சேவைவரி (Service Tax) குறிப்பிட்டுள்ளதை தவிர்க்க வேண்டும் என்ற நிபந்தனையினை வழங்கி, அந்த நிபந்தனையினை மேற்காண் நிறுவனம் ஏற்றுக்கொண்டதற்கான எழுத்துப்பூர்வ கடிதம் பெற்றப்பின், அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்குழு ஒருமனதாகத் தீர்மானித்த நிலையில், மேற்காண் நிறுவனம், பல்கலைக்கழகம் தெரிவித்தவாறு சேவைவரியினை தவிர்த்து ஒப்பந்தம் வழங்குமாறு எழுத்துப்பூர்வமான கடிதம் வழங்கியதன் அடிப்படையில், அந்நிறுவனத்திற்கு பெரியார் பல்கலைக்கழக பாதுகாவல் பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்க ஆட்சிக்குழுவின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது.

**தீர்மானம்:**
**ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved). தற்போது முன்னோட்டமாக ஓராண்டுக்கு மட்டும் அனுமதி வழங்கலாம் எனவும், அதன் பின்னர் அந்நிறுவனம் வழங்கும் பாதுகாப்பினை ஆய்வு செய்து பணியாற்றுதலின் அடிப்படையில் (Performance Based) பணியினை தொடர்வது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன், மேற்காண் நிறுவனத்திற்கான ஆணையினை விளக்கிக்கொள்ள வேண்டுமெனில் பல்கலைக்கழக நிர்வாகம் இரண்டு மாதங்களுக்கு முன் அந்நிறுவனத்திற்கு அறிவிப்பு வழங்கி விளக்கிக்கொள்ளலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.**

**இனம் 9** **முனைவர் E.S. கவிதா, உதவிப்பேராசிரியர், நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறை அவர்கள் Sri Lanka-வில் நடைபெறும் பன்னாட்டுக் கருத்தரங்கில் (International Conference) கலந்து கொள்ள அனுமதி மற்றும் இது தொடர்பாக Sri Lanka செல்ல விசா பெறுவதற்கு தடையின்மைச் சான்றிதழ் வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.**

**குறிப்பு:**
முனைவர் E.S. கவிதா, உதவிப்பேராசிரியர், நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறை அவர்கள் 21.10.2016 முதல் 23.10.2016 வரை மூன்று நாட்களுக்கு Sri Lanka, International

Conference on Library and Information Management, University of Kelaniya, Sri Lanka -இல் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் "Perception and Utilization of Social Networking Sites among the Research Scholars of Library and Information Science in Tamilnadu" என்ற தாளை பதிவு செய்ய வழங்கப்பட்டதற்கும் அனுமதி மற்றும் இது தொடர்பாக Sri Lanka செல்ல VISA பெறுவதற்கு தடையின்மைச் சான்றிதழ் வழங்கப்பட்டதற்கும் ஆட்சிக்குழுவின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மானம்:**

**ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved).**

**இனம் 10** **முனைவர் M.இராம்குமார், உதவிப்பேராசிரியர், புவி அமைப்பியல் துறை அவர்கள் University of South Brittany, Vannes, France-வில் 14.11.2016 முதல் 23.11.2016 வரை Visiting Professor-ஆக கலந்து கொள்ள அனுமதி வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டுதல் தொடர்பாக.**

குறிப்பு:

முனைவர் M. இராம்குமார், உதவிப்பேராசிரியர், புவி அமைப்பியல் துறை அவர்கள் University of South Brittany, Vannes, France-வில் 14.11.2016 முதல் 23.11.2016 வரை நடைபெற்ற GMGL affiliated to: UMR CNRS 6538 Domaine-இல் Visiting Professor-ஆக அன்னாரின் சொந்த செலவில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டதற்கு ஆட்சிக்குழுவின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மானம்:**

**ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved).**

**இனம் 11** **முனைவர் K. முருகேசன், பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், சுற்றுச்சூழல் அறிவியல் துறை அவர்கள் Hong Kong-ல் நடைபெறும் Collaborative Research மற்றும் பன்னாட்டுக் கருத்தரங்கில் (International Conference) கலந்து கொள்ள அனுமதி மற்றும் இது தொடர்பாக 05.12.2016 முதல் 18.12.2016 வரை மாற்றுப்பணி வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டுதல் தொடர்பாக.**

குறிப்பு:

முனைவர் K. முருகேசன், பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், சுற்றுச்சூழல் அறிவியல் துறை 05.12.2016 முதல் 18.12.2016 வரை Hong Kong, Baptist University-இல் நடைபெறும் Collaborative Research-இல் கலந்து கொள்ளவும் மற்றும் அக்காலத்திற்குள்ளாக 06.12.2016 முதல் 08.12.2016 வரை Hong Kong-இல் நடைபெறும் "Asia-Pacific Conference on Biotechnology for Waste Conversion 2016" (BIOWCHIK 2016) என்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் கலந்துக்கொள்ள அனுமதியும் மற்றும் இது தொடர்பாக Hong Kong செல்ல 05.12.2016 முதல் 18.12.2016 வரை மாற்றுப்பணி (OOD) வழங்க ஆட்சிக்குழுவின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**தீர்மானம்:**

**ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved).**

**இனம் 12** **முனைவர் G. யோகானந்தன், இணைப்பேராசிரியர், பெரியார் பல்கலைக்கழக மேலாண்மைக் கல்வி நிறுவனம் அவர்கள் Sri Lanka-வில் நடைபெறும் பன்னாட்டுக் கருத்தரங்கில் (International Conference) கலந்து கொள்ள அனுமதியும், 10.01.2017 முதல் 12.01.2017 வரை மாற்றுப்பணி மற்றும் இலங்கை செல்ல விசா பெறுவதற்கு தடையின்மைச் சான்றிதழ் வழங்க அனுமதி வேண்டுதல் தொடர்பாக.**

குறிப்பு:

முனைவர் G. யோகானந்தன், இணைப்பேராசிரியர், பெரியார் பல்கலைக்கழக மேலாண்மைக் கல்வி நிறுவனம் அவர்கள் 11.01.2017 அன்று University of Kelaniya, Srilanka-இல் நடைபெறும் 2nd International Conference for Accounting Researchers and Educators என்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொள்ள அனுமதியும் மற்றும் 10.01.2017 முதல் 12.01.2017 வரை மாற்றுப்பணி (OOD) வழங்கவும் இலங்கை செல்ல விசா பெறுவதற்கு தடையின்மைச் சான்றிதழ் வழங்கவும் ஆட்சிக்குழுவின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது.

**தீர்மானம்:**

**ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved).**

இனம் 13 **பெரியார் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிவரும் கால முறை ஊதியப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குதல் குறித்து துணைவேந்தர் அவர்களால் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல் - தொடர்பாக.**

குறிப்பு :

பெரியார் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிவரும் காலமுறை ஊதிய நிர்வாகப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்காக கடந்த 08.07.2015 அன்று நடைபெற்ற 86-ஆவது ஆட்சிக்குழுக் கூட்டத்தில் இனம் 4-இல் மாண்புமிகு துணைவேந்தர் அவர்களுக்கு முழு அதிகாரம் வழங்கித் தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் கீழ்க்கண்டுள்ளவர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டது. (1) முனைவர் ஏ. முத்துசாமி, பேராசிரியர், ஆட்சிக்குழு உறுப்பினர், கணிதவியல் துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-11, (2) முனைவர். பி. சாந்தி, இணைப்பேராசிரியர், ஆட்சிக்குழு உறுப்பினர், ஆங்கிலத்துறை, கந்தசாமி கண்டர் கல்லூரி, பரமத்தி வேலூர், நாமக்கல் மாவட்டம், (3) முனைவர் ஜெ. செந்தில்வேல்முரகன், உதவிப்பேராசிரியர், ஆட்சிக்குழு உறுப்பினர், மேலாண்மைத்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-11, (4). முனைவர் பி. மதிவாணன், பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், ஆட்சிக்குழு உறுப்பினர், வணிகவியல் துறை, எம்.ஜி.ஆர். கல்லூரி, ஒசூர் (5) பதிவாளர், பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-11. இக்குழவினர் கடந்த **25.10.2016**-அன்று பதவி உயர்வுக்குத் தகுதியுடைய பணியாளர்களின் பெயர் பட்டியலையும், அப்பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய பதவி உயர்வு பணியிடத்தையும் குறிப்பிட்டு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். மேற்காண் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையின் மீது நடவடிக்கை மேற்கொள்ள ஆட்சிக்குழுவின் அனுமதி வேண்டிச் சமர்ப்பிக்கப்படுகின்றது (குழுவின் அறிக்கை துணைவேந்தர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது).

**தீர்மானம்:**

**ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved).**

இனம் 14 **பெரியார் பல்கலைக்கழக உதவிப்பேராசிரியர்களுக்கு பல்கலைக்கழக மானியக்குழு வழிகாட்டுதலின்படி, கல்விநிலைத் தகுதி (CAS-AGP) ஊதியம் (Stage II to III) ரூ.7,000/- லிருந்து ரூ.8,000/-ஆக உயர்த்துதல் குறித்து 11.11.2016 அன்று Screening cum Evaluation Committee கூட்டம் நடத்தப்பட்டு தீர்மானங்கள் பெறப்பட்டது. எனவே, மேற்கண்ட குழுக் கூட்டத் தீர்மானங்கள் குறித்து ஆட்சிக்குழுவின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக.**

குறிப்பு:

பெரியார் பல்கலைக்கழக பல்வேறு துறைகளைச் சேர்ந்த கீழ்க்கண்டுள்ள உதவிப்பேராசிரியர்களுக்கு கல்வித்தகுதி ஊதியம் Stage II to III ரூ.7,000/-லிருந்து ரூ.8,000/-ஆக உயர்த்துதல் குறித்து 11.11.2016 அன்று Screening cum Evaluation Committee கூட்டங்கள் நடத்தப்பட்டு தீர்மானங்கள் பெறப்பட்டது. மேற்கண்ட குழுக் கூட்டத் தீர்மானங்கள் மீது ஆட்சிக்குழுவின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்படுகிறது.

**Assistant Professors - CAS-AGP Stage II-III**

| S. No. | Name | Designation | Date of Joining | Date of CAS Promotion from stage I-II | CAS-AGP Stage II-III w.e.f. (Completed 5 years service by calculating Past Service also) |
|---|---|---|---|---|---|
| CAS – AGP - STAGE II to III | | | | | |
| 1 | Dr. R. Suresh | Assistant Professor in Geology | 24.11.2004 | 01.12.2010 | 25.11.2014 |
| 2 | Dr. N. Elangovan | Assistant Professor in Biotechnology | 30.10.2008 | 30.10.2012 | 30.10.2015 |
| 3 | Dr. C. Gobalakrishnan | Assistant Professor in Sociology | 31.10.2008 | 31.10.2012 | 31.10.2015 |
| 4 | Dr. M. Jeyaseelan | Assistant Professor in Sociology | 03.11.2008 | 03.11.2012 | 03.11.2015 |
| 5 | Dr. R. Subramani | Assistant Professor in Journalism and Mass Communication | 07.11.2008 | 07.11.2012 | 07.11.2015 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | Dr. E.K. Girija | Assistant Professor in Physics | 27.11.2008 | 27.11.2013 | 27.11.2016 |
| 8 | Dr. B.J. Geetha | Assistant Professor in English | 29.10.2008 | 16.12.2012 | 06.10.2016 |
| 9 | Dr. J. Parameswari | Assistant Professor in Psychology | 29.10.2008 | 28.10.2013 | 30.10.2016 |

**தீர்மானம்:**

**மேற்காண் பொருள்நிரலினை நிதிக்குழுவிற்கு சமர்ப்பித்து, நிதிக்குழுவின் தீர்மானத்தினை ஆட்சிக்குழுவில் சமர்ப்பித்து, ஆட்சிக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.**

**இனம் 15** **பல்கலைக்கழகத்தில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 7 ஆசிரியர்கள் மற்றும் மேட்டூர், பென்னாகரம், எடப்பாடி-யில் இயங்கும் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் 3 பேரும் 2014-ஆம் ஆண்டு பணியில் சேர்ந்து இரண்டு வருடம் தகுதிகாண் பருவம் நிறைவடைந்த நிலையில், பணிநிரந்தர ஆணை வழங்கும் பொருட்டு தன்னிலை மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் கல்வி, பணிஅனுபவச் சான்றிதழ்களைச் சரிபார்த்தல் குழுக் கூட்டம் 15.11.2016 அன்று நடத்தப்பட்டு, தீர்மானங்கள் பெறப்பட்டது. அக்குழக் கூட்டத் தீர்மானத்தின்படி, முனைவர் மு. பர்வீன் பானு, உதவிப்பேராசிரியர், ஜவுளி மற்றும் ஆடை வடிவமைப்புத் துறை அவர்கள் தகுதிகாண் பருவத்தில் மருத்துவ விடுப்பு துய்த்துள்ள நிலையில், அவர்களுக்கு மருத்துவ விடுப்பு நாளை கழித்தது போக இரண்டு வருடம் நிறைவடைந்த பின்னர் பணிநிரந்தர ஆணை வழங்கவும், அதைத் தொடர்ந்து மீதம் உள்ள பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி முதல்வர்கள் ஆகியோர்களுக்கும் பணிநிரந்தர ஆணை வழங்கவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனை ஆட்சிக்குழுவின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்படுகிறது.**

குறிப்பு:

பல்கலைக்கழகத்தில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த, 7 ஆசிரியர்கள் மற்றும் மேட்டூர், பென்னாகரம், எடப்பாடி-யில் இயங்கும் பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்கள் 3 பேரும் 2014-ஆம் ஆண்டு பணியில் சேர்ந்து இரண்டு வருடம் தகுதிகாண் பருவம் நிறைவடைந்த நிலையில் பணிநிரந்தர ஆணை வழங்கும் பொருட்டு தன்னிலை மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் கல்வி, பணியனுபவச் சான்றிதழ்களைச் சரிபார்த்தல் குழக் கூட்டம் 15.11.2016 அன்று நடத்தப்பட்டு, தீர்மானங்கள் பெறப்பட்டது. அக்குழக் கூட்டத் தீர்மானத்தின்படி, ஜவுளி மற்றும் ஆடை வடிவமைப்புத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் மு. பர்வீன் பானு அவர்கள் தகுதிகாண் பருவத்தில் மருத்துவ விடுப்பு துய்த்துள்ள நிலையில், அவர்களுக்கு மருத்துவ விடுப்பு நாட்களை கழித்தது போக இரண்டு வருடம் நிறைவடைந்த பின்னர் பணிநிரந்தர ஆணை வழங்கவும், மீதம் உள்ள பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக உறுப்புக்கல்லூரி முதல்வர் ஆகியோர்களுக்கு பணிநிரந்தர ஆணை வழங்குவது குறித்து ஆட்சிக்குழுவின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்படுகிறது

**தீர்மானம்:**

**ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved).**

**இனம் 16** **முனைவர் மு. மருதமுத்து, உதவிப்பேராசிரியர், வணிகவியல்துறை அவர்கள் 19.10.2014 முதல் ஒரு வருடம் மீள்உரிமை அடிப்படையில் பணிவிடுவிப்பு பெற்று மேட்டூர், பெரியார் பல்கலைக்கழகக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வராக 20.10.2014 அன்று பணிசேர்ந்து பணியாற்றி வருகிறார். அவரின் ஒரு வருட மீள்பணிக்காலம் 19.10.2015 அன்றுடன் நிறைவடைந்ததால், அவரின் வேண்டுகோள் கடிதத்தை சிறப்பினமாகக் கருதியும் மற்றும் அவர் பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியில் பணியாற்றுவதாலும், அவருக்கு தகுதிகாண் பருவம் நிறைவடையும் காலம் வரை மேலும் ஒருவருடத்திற்கு மீள்பணிக்காலத்தை 19.10.2015 முதல் 18.10.2016 வரை நீட்டித்து 88-ஆவது ஆட்சிக்குழுக் கூட்டத்தில் அனுமதித்து ஆணை வழங்கப்பட்டது – தற்போது அன்னாரின் மீள்உரிமைக்காலம் 18.10.2016 அன்று பிற்பகல் முதல் முடிவடைவதால் மீள்உரிமையை துண்டித்து பணிவிடுவிப்பு ஆணை வழங்குவது குறித்து ஆட்சிக்குழுவின் ஒப்புதல் வேண்டுதல் தொடர்பாக.**

குறிப்பு:

முனைவர் மு. மருதமுத்து, உதவிப்பேராசிரியர், வணிகவியல்துறை அவர்கள் 24.11.2004 முதல் பெரியார் பல்கலைக்கழகத்தில் வணிகவியல்துறை உதவிப்பேராசிரியராகப் பணியாற்றி 19.10.2014 அன்று முதல் ஒரு வருடம் மீள்உரிமை அடிப்படையில் பணிவிடுவிப்பு பெற்று மேட்டூர், பெரியார் பல்கலைக்கழகக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வராக 20.10.2014 அன்று பணிசேர்ந்து பணியாற்றி வருகிறார். அவரின் ஒரு வருட மீள்பணிக்காலம் 19.10.2015 அன்றுடன் நிறைவடைந்ததால், முதல்வர் பணியிடத்திற்கான இரண்டாண்டுகள் தகுதிகாண்

பருவம் நிறைவடையும் காலம் 19.10.2016 வரை மேலும் ஒரு வருடத்திற்கு மீள்பணிக்காலத்தை 19.10.2015 முதல் நீட்டித்து வழங்குமாறு கோரியதற்கு, துணைவேந்தரின் குறிப்பாணையின்படி, அவரின் வேண்டுகோள் கடிதத்தை சிறப்பினமாகக் கருதியும் மற்றும் அவர் பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியில் பணியாற்றுவதாலும், அவருக்கு தகுதிகாண் பருவம் நிறைவடையும் காலம் வரை மேலும் ஒருவருடத்திற்கு மீள்பணிக்காலத்தை 19.10.2015 முதல் 18.10.2016 வரை நீட்டித்து ஆணை வழங்கப்பட்டது. அதன்படி, அன்னாரின் மீள்உரிமைக்காலம் 18.10.2016 அன்று பிற்பகலுடன் முடிவடைவதால், அன்னாரின் மீள்உரிமையை துண்டித்து பணிவிடுவிப்பு ஆணை வழங்குவது குறித்து ஆட்சிக்குழுவின் ஒப்புதல் வேண்டிச் சமர்ப்பிக்கப்படுகிறது.

**தீர்மானம்:**

**ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved).**

**இனம் 17** **பெரியார் பல்கலைக்கழகத்தில் புதியதாக துவங்கப்பட்ட மருத்துவம்சார் உணவூட்டம் மற்றும் உணவு விதிமுறைத்துறைக்கு (Clinical Nutrition and Dietetics Department) பணியிடமாற்ற முறையில் (By Transfer) உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்துறை பேராசிரியர் முனைவர் பி.நாஸ்னி என்பாரை பேராசிரியர் மற்றும் துறைத்தலைவராக நியமித்தல் மற்றும் உணவு அறிவியல் ஊட்டச்சத்துத் துறையில் இவரின் காலியாகும் பணியிடமாகிய இணைப்பேராசிரியர் பணியிடத்திற்கு பொதுப்பிரிவில் (General Turn) நிரப்புதல் தொடர்பாக.**

குறிப்பு:

பெரியார் பல்கலைக்கழகத்தில் 2016-17 கல்வியாண்டு முதல், 01.07.2016 அன்று நடைபெற்ற 37-ஆவது நிதிக்குழுவின் ஒப்புதலின்படியும், 13.07.2016 அன்று நடைபெற்ற 90-ஆவது ஆட்சிக்குழுவின் தீர்மானம் இனம் 2-இன்படியும், மருத்துவம்சார் உணவூட்டம் மற்றும் உணவு விதிமுறைத்துறை (Clinical Nutrition and Dietetics Department) துவங்கப்பட்டது. மேற்காண் துறைக்கான மாணாக்கர்கள் சேர்க்கை இவ்வாண்டே துவங்கப்பட்டு, 27 மாணாக்கர்கள் முதலாமாண்டில் சேர்க்கை பெற்று பயின்று வருகின்றனர்.

**மேற்காண் புதிய துறைக்கான நிர்வாகப் பணிகளையும், கல்விசார் பணிகளையும் மேற்கொள்ள, உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்து துறையில் பேராசிரியராகப் பணியாற்றிவரும் முனைவர் பி.நாஸ்னி என்பார் துறைத்தலைவர் பொறுப்பாக நியமிக்கப்பட்டு 2016-17 கல்வியாண்டில் 14.07.2016 முதல் பணியாற்றி வருகின்றார்.**

இந்நிலையில், தற்போது மேற்காண் புதிய துறையில் 27 மாணாக்கர்களுக்கு சேர்க்கை வழங்கப்பட்டுள்ளமையாலும், அம்மாணாக்கர்களுக்கு செய்முறை மற்றும் மருத்துவ மனைகளுக்கு கல்விசார் பயிற்சி ஆகியனவற்றிற்கு செல்லவேண்டியுள்ளமையாலும், ஆராய்ச்சி கட்டுரைகள் சமர்ப்பித்து நிதி பெறுவதற்கும், அவசியமாக இத்துறைக்கு பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் வேண்டும்.

பெரியார் பல்கலைக்கழக சாசன விதிகளில் அத்தியாயம் **<u>VIII- conditions of Service and Recruitment – 4. RECRUITMENT</u>** – The Syndicate shall have the powers to create teaching and non-teaching posts, on specific recommendations of the Vice Chancellor, from time to time based on the need (1) Qualification and method of recruitments:

**<u>(1). By direct recruitment; (2). By transfer; (3). By promotion through selection from the lower category;</u>**

-இன் அடிப்படையிலும், மேற்காண் ஆசிரியர் பல்கலைக்கழக துறையிலேயே பணியாற்றி வருவதாலும், குறிப்பாக புதிய துறையில் உள்ள பாடத்திட்டத்தில் வல்லுநராக உள்ளமையாலும், சாசன விதிகளில் தெரிவித்துள்ள மேற்காண் சரத்துக்களின் அடிப்படையில் (Recruitment – By transfer), மருத்துவம்சார் உணவூட்டம் மற்றும் உணவு விதிமுறைத்துறை (Clinical Nutrition and Dietetics Department)–க்கு பேராசிரியர் மற்றும் துறைத்தலைவராக முனைவர் பி. நாஸ்னி அவர்களை நியமிக்கவும், அம்மையார் உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்துத் துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றி பணிமேம்பாட்டுத்திட்டத்தில் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றமையால், அம்மையார் மருத்துவம்சார் உணவூட்டம் மற்றும் உணவு விதிமுறைத்துறைக்கு பேராசிரியராகப் பணியிடமாறுதல் பெறும்நிலையில், உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்துத்துறையில் காலியாகும் இவரின் இணைப்பேராசிரியர் (Associate Professor) பணியிடத்தினை பொதுசுழற்சியில் (General Turn) நிரப்புவதற்கு ஆட்சிக்குழுவின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது.

**தீர்மானம்:**

**பணியிடமாறுதலில் நியமனம் செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved).**

**மேலும், உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்துத்துறையில் பேராசிரியர் முனைவர் பி.நாஸ்னி என்பாரின் பணியிடமாறுதல் நியமனத்தால் காலியாகவுள்ள இணைப்பேராசிரியர் (Associate Professor) பணியிடத்தினை நிரப்புவது குறித்து நிதிக்குழுவிற்கு பொருள்நிரல் சமர்ப்பித்து, அக்குழுவின் தீர்மானத்தினை ஆட்சிக்குழுவிற்கு சமர்ப்பித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.**

**இனம் 18** **பெரியார் பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் வி. வைத்தியநாதன் அவர்கள் முன்பணிக் காலங்களை பல்கலைக்கழகப் பணிக்காலத்தோடு கணக்கில் எடுத்துக்கொள்ளுமாறு வழக்கு மேல்முறையீடு செய்துள்ளார். அவ்வழக்கிற்கு (வழக்கு எண்: W.A. No.809 of 2016 and C.M.P. No. 10633 of 2016) ஒரு வல்லுநர் குழு அமைத்து அக்குழுவின் கருத்துரவைப் பெற்று அதன்பின் நடடிவக்கை மேற்கொள்ள 08.11.2016 அன்று மீண்டும் குழக் கூட்டம் நடத்தப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அக்குழக் தீர்மானம் குறித்து ஆட்சிக்குழுவின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக.**

குறிப்பு:

பல்கலைக்கழக உதவிப்பேராசிரிகளின் முன்பு பணியாற்றிய பணிக்காலத்தை கணக்கில் எடுத்துக்கொள்வது குறித்து 29.03.2016, 30.03.2016, 31.03.2016, 01.04.2016 மற்றும் 04.04.2016 ஆகிய நாட்களில் குழக்கூட்டம் நடைபெற்று, தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஆணை வழங்கப்பட்டது. அவற்றில் முனைவர் வி. வைத்தியநாதன், உதவிப்பேராசிரியர், பொருளியல் துறை அவர்களுக்கு வழங்காதக் காரணத்தால் அன்னார் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ள வழக்கில் கீழ்க்கண்டவாறு தீர்ப்பு பகரப்பட்டுள்ளது (வழக்கு எண்: W.A. No.809 of 2016 and C.M.P. No. 10633 of 2016).

> *6. Accordingly, the second respondent/University is directed to consider the case of the appellant as per UGC Regulations 2010, and pass necessary orders, on merits and in accordance with law, within a period of two months from the date of receipt of a copy of this judgement. It is made clear that in the event or his entitlement for the benefit, his seniority may be counted for the career Advancement Scheme as per UGC Regulations 2010.*

இத்தீர்ப்பின் மீது நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏதுவாக ஒரு வல்லுநர் குழு அமைத்து அக்குழுவின் கருத்துரவைப் பெற்று அதன்பின் நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக 08.11.2016 அன்று கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தீர்மானத்தின் மீது ஆட்சிக்குழுவின் ஆலோசனை வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது (குழுவின் தீர்மானம் துணைவேந்தர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது).

**தீர்மானம்:**
**குழுவின் தீர்மானித்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. மேற்காண் குழுவின் பரிந்துரைகளை நீதிமன்றத்திற்கு தெரிவிக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.**

**இனம் 19** **பெரியார் பல்கலைக்கழக பொருளியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் V. வைத்தியநாதன் அவர்களுக்கு பல்கலைக்கழக மானியக்குழு வழிகாட்டுதலின்படி, கல்விநிலைத் தகுதி (CAS-AGP) Stage II to III ரூ.7,000/-லிருந்து ரூ.8,000/-ஆக உயர்த்துதல் குறித்து 22.11.2016 அன்று நடைபெற்ற Screening cum Evaluation Committee கூட்டத் தீர்மானம் மீது ஆட்சிக்குழுவின் ஆலொசனை வேண்டுதல் - தொடர்பாக.**
குறிப்பு:

பெரியார் பல்கலைக்கழக பொருளியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் V. வைத்தியநாதன் அவர்களுக்கு கல்விநிலைத் தகுதி (CAS-AGP) ஊதியம் (Stage II to III) ரூ.7,000/-லிருந்து ரூ.8,000/-ஆக உயர்த்துதல் குறித்து 22.11.2016 அன்று Screening cum Evaluation Committee கூட்டம் நடத்தப்பட்டு தீர்மானம் பெறப்பட்டது. மேற்கண்ட குழுக் கூட்டத் தீர்மானத்தின் மீது ஆட்சிக்குழுவின் ஆலோசனை வேண்டிச் சமர்ப்பிக்கப்படுகிறது (குழுவின் தீர்மானம் துணைவேந்தர் அவர்களால் சமர்ப்பிக்கப்படும்).

**தீர்மானம்:**
**மேற்காண் பொருள்நிரலினை நிதிக்குழுவிற்கு சமர்ப்பித்து, நிதிக்குழுவின் தீர்மானத்தினை ஆட்சிக்குழுவிற்கு சமர்ப்பித்து, ஆட்சிக்குழுவின் தீரமானத்தின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.**

**இனம் 20** **பெரியார் பல்கலைக்கழகத்தில் இரண்டாண்டுக்கு மேல் தொகுப்பூதியத்தின் கீழ் பணியாற்றிவரும் மாற்றுத்திறனாளிகளுக்கு காலமுறை ஊதியம் வழங்குதல் குறித்து வெளியிடப்பட்ட அரசாணையினை நடைமுறைப்படுத்துவது குறித்து அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை மற்றும் பரிந்துரை மீதான மேல்நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஒப்புதல் மற்றும் வழிகாட்டுதல் வேண்டுதல் - சார்பாக.**

**குறிப்பு:**

அரசாணை (நிலை) எண். 40 (உயர்கல்வி (கே1) துறை நாள்: 03.03.2015-இல், பல்கலைக்கழகத்தில் ஈராண்டுகளுக்கு மேலாக தொகுப்பூதியத்தில் பணியாற்றிவரும் மாற்றுத்திறனாளிகளை காலமுறை ஊதியத்தில் பொருத்துவது குறித்து அரசாணை வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில். மாற்றுத்திறனாளிகளுக்கு காலமுறை ஊதியம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள (1). முனைவர் K. தங்கவேல், ஆட்சிக்குழு உறுப்பினர், பேராசிரியர் மற்றும் தலைவர், கணினி அறிவியல் துறை, (2). முனைவர் V. ராஜ், பேராசிரியர் மற்றும் தலைவர், வேதியியல் துறை, (3). முனைவர் T. பூங்கொடி விஜயகுமார், பேராசிரியர் மற்றும் தலைவர், உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்துத் துறை ஆகியோர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு, 04.12.2015 அன்று நடைபெற்ற இக்குழுவின் கூட்டத்தில் மாற்றுத்திறனாளி தொகுப்பூதியப் பணியாளர்களிடமிருந்து கல்வித்தகுதி சான்றிதழ்கள், சாதிச்சான்றிதழ் மற்றும் ஊனத்தின் தன்மைக்கான (சதவீகிதம்) சான்றிதழ் ஆகியவற்றை சரிபார்க்கப்பட்டதன் தொடர்ச்சியாக, 02.02.2016 அன்று நடைபெற்ற கூட்டத்தீர்மானத்தில் இப்பணியாளர்கள் வெவ்வேறு கல்வித்தகுதிகள் பெற்றுள்ளமையால் காலமுறை ஊதியத்தில் எந்தப்பணியிடத்தில் பொருத்துவது என்பது குறித்து தெளிவுரை வழங்க கோரி இவ்வலுவலக கடித எண்: PU/Estt / R6/0438/2013-2 நாள்: 04.02.2016 வாயிலாக அரசுக்கு தெளிவுரை கோரி கடிதம் அனுப்பப்பட்டது. மேற்காண் கடிதத்தின் தொடர்ச்சியாக, அரசு செயலாளர், உயர்கல்வித் (கே1) துறை, அவர்களின் கடித எண்: 2111/கே1/2016-2 நாள்: 30.09.2016-இல் மாற்றுத்திறனாளி தொகுப்பூதியப் பணியாளர்கள் காலமுறை ஊதியத்தில் எந்தப்பணியிடத்தில் பொருத்துவது என்பது குறித்து அரசின் கடிதம் பெறப்பட்டதையடுத்து, அதனை பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்வதற்காக 07.11.2016 அன்று கூட்டம் நடைபெற்றது.

மாற்றுத்திறனாளிகளை காலமுறை ஊதியத்தில் பொருத்துவது குறித்து 07.11.2016 அன்று நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகள் மீது மேல்நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஆட்சிக்குழுவின் ஒப்புதல் மற்றும் வழிகாட்டுதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது. (குழுவின் அறிக்கை மாண்புமிகு துணைவேந்தர் அவர்களால் ஆட்சிக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டது).

**தீர்மானம்:**

**ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved).**

**இனம் 21** **ரூ.2000/- வரையில் விலைப்புள்ளியின் அத்தியாவசியப் பொருட்களை அவசர அவசியம் கருதி கொள்முதல் செய்வதற்கு ஆட்சிக்குழுவின் அனுமதி கோருதல் - தொடர்பாக.**

**குறிப்பு:**

பெரியார் பல்கலைக்கழக சாசன விதிகளில் விதிமுறைகள் (Rules)-இல் XI-Purchase of Stores – (7)-இல் Limitations for quotations and Tenders : No competitive quotations / tenders are necessary for purchase made as follows: (i) From private parties / firms Rs. 500/- at a time எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், பெரியார் பல்கலைக்கழக துறைகள் மற்றும் அலுவலகங்களில் உபகரணங்கள் மற்றும் தளவாடச்சாமான்கள் உடனடியாக பழுதுநீக்கம் செய்ய வேண்டிய இனங்களுக்கு ரூ.500/-க்கும் மேலாக செலவுத்தொகை ஏற்படும் நிலையிலும், உபகரணங்கள் ரூ.500/-க்கும் மேலாக சில்லரை விலையாக உள்ளமையாலும், அவசர அவசியம் கருதி உடனடியாக தனியார் நிறுவனங்களிலும், தனியரிடமும் தேவையான பொருட்களை கொள்முதல் செய்து, பொருத்த வேண்டிய சூழல் ஏற்படுகின்றது.

- ❖ உதாரணத்திற்கு: ஆய்வகத்தில் உள்ள உபகரணம் செய்முறைத்தேர்வு நடைபெறுவதற்கு ஒரு நாளைக்கு முன்பு பழுதாகுமேயானால், அதனை உடனடியாக சரி செய்ய வேண்டி, பழுதுநீக்கம் செய்யப்படுவதுடன், அதற்குத் தேவையான உதிரி பாகங்கள் பொருத்த வேண்டியுள்ளது.
- ❖ மின் சாதனங்கள் பழுதடைந்து, உடனடியாக தடையற்ற மின்சாரம் வழங்க வேண்டிய சூழ்நிலையில், தேவையான உதிரி பாகங்கள் பொருத்த வேண்டியுள்ளது.
- ❖ மேலும், மாணவ, மாணவியர் விடுதிகளிலும், அலுவலகங்களிலும் உள்ள குழாய்கள் பழுதடையும் நிலையில், அத்தியாவசியமாக பழுதுநீக்கம் செய்ய வேண்டிய சூழ்நிலையில், ரூ.500/-க்கும் அதிகமான செலவுத்தொகை ஏற்படும் சூழல் உள்ளது.

எனவே, பல்கலைக்கழக மாணவ, மாணவியர் நலன் கருதியும், அலுவலகங்கள் எவ்விதமான தடையுமின்றி இயங்கவும், அத்தியாவசிய, அவசிய அவசரம் ஏற்படும் சூழ்நிலைகளிலும், தரமான பொருட்களை உபயோகிக்க வேண்டும் என்ற நோக்கில் பல்கலைக்கழக சாசன விதிகளில் ரூ.500/- வரையிலான பொருட்களை கொள்முதல் செய்ய விலைப்புள்ளி தேவையில்லை என்ற உச்ச வரம்பினை ரூ.2000/- வரை உயர்த்தி கொள்முதல் செய்ய, ஆட்சிக்குழுவின் ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது.

**தீர்மானம்:**

**ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved).**

**இனம் 22** **பெரியார் தொலைநிலைக்கல்வி நிறுவனத்தில் சேர்க்கை பெற்ற மாணவர் Mr.Khatri Hari.M (Reg.No.B10UCM15960114) போலிச்சான்றிதழ் சமர்ப்பித்து Break-in-Studies முறையில் சேர்க்கை பெற்றமை குறித்து சூரமங்கலம் காவல் நிலையத்தில் புகார் செய்து, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட விவரம் ஆட்சிக்குழுவின் பார்வைக்கு சமர்ப்பித்தல் தொடர்பாக.**

**குறிப்பு:**

பெரியார் தொலைநிலைக்கல்வி நிறுவனத்தில் சேர்க்கை பெற்ற மாணவர் Mr.Khatri Hari.M (Reg.No.B10UCM15960114) போலிச்சான்றிதழ் சமர்ப்பித்து Break-in-Studies முறையில் சேர்க்கை பெற்றமை குறித்து கடந்த 12.09.2016 அன்று நடைபெற்ற ஆட்சிக்குழுவின் 91-ஆவது கூட்டத்தில் இதர இனம் 4-ன் வழியாக ஆட்சிக்குழுவின் ஆலோசனை கோரியமைக்கு கீழ்க்கண்டுள்ளவாறு தீர்மானிக்கப்பட்டது.

***தீர்மானம்:***

***08.09.2016 அன்று நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved). இதன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்களை இரத்து செய்ய தீர்மானிக்கப்படுகிறது. மேலும், இது குறித்து பிற நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், போலிச்சான்றிதழ் சமர்ப்பித்த மாணவர் மீது, பெரியார் பல்கலைக்கழக சாசன விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள சரத்துக்களின் அடிப்படையிலும், சட்ட திட்டங்களின் அடிப்படையிலும் நடவடிக்கை மேற்கொள்ளவும் மாண்புமிகு துணைவேந்தர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கி இக்குழு ஒருமனதாகத் தீர்மானிக்கின்றது.***

மேற்காண் தீர்மானத்தின் அடிப்படையில், மாண்புமிகு துணைவேந்தர் அவர்களின் ஆணையின்படி, பதிவாளர் அலுவலக கடித எண். PU/PRIDE/ Mr.Khatri Hari.M/FIR/ Permission/2016 Dated: 11.11.2016 இன் வழியாக, சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ள சூரமங்கலம் காவல் நிலையத்தில் புகார் வழங்கப்பட்டு, புகாரின் அடிப்படையில் காவல்துறையால் முதல் தகவல் அறிக்கை எண். 849-இன் வழியாக, 01.12.2016 அன்று பதிவு செய்யப்பபட்டுள்ளது என்ற தகவல் ஆட்சிக்குழுவின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

**தீர்மானம்:**

**குறித்துக்கொள்ளப்பட்டது.**

**இனம் 23** **முனைவர் N. இரவீந்திரநாத் தாகூர், முதல்வர், பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாப்பிரெட்டிப்பட்டி அவர்கள் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால் அன்னாரை 20.10.2016 அன்று பிற்பகலுடன் முதல்வர் பணியிலிருந்து விடுவித்தது – முதல்வர் பணியிடம் குறித்து 04.11.2016 அன்று விளம்பரம் வெளியிடப்பட்டு, 18.11.2016 வரை விண்ணப்பங்கள் பெறப்பட்டது – அவ்விண்ணப்பங்களை 22.11.2016 அன்று கூர்ந்தாய்வு செய்யப்பட்டுள்ளது – ஆட்சிக்குழுவின் பின்னேற்பு அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.**

**குறிப்பு:**

முனைவர் N. இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் பாப்பிரெட்டிப்பட்டியில் இயங்கி வரும் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வராக 12.02.2015 முதல் 20.10.2016 வரை பணியாற்றி உள்ளார். தற்போது, அன்னார் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக தேர்வாணையர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்கான பணிநியமன ஆணை கிடைக்கப்பெற்றதால், பெரியார் பல்கலைக்கழக பதிவாளர் அவர்களின் செயன்மைகளின்படி, பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி முதல்வர் பணியிலிருந்து 20.10.2016 அன்று பிற்பகல் விடுவிக்கப்பட்டார்.

மேலும், தற்போது, காலியாக உள்ள பாப்பிரெட்டிப்பட்டி உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி பணியிடம் நிரப்புதல் குறித்து 04.11.2016 அன்று விளம்பரம் வெளியிடப்பட்டு, 18.11.2016 வரை விண்ணப்பங்கள் பெறப்பட்டன. மேலும், அவ்விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்ய 22.11.2016 அன்று கூர்ந்தாய்வுக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டு, கூர்ந்தாய்வுக் குழுத் தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

மேற்காண் பொருள் ஆட்சிக்குழுவின் பின்னேற்பு அனுமதி வேண்டிச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

**தீர்மானம்:**
**ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved).**

**இனம் 24** **To consider the appointment of Nine Assistant Professors under UGC XII plan scheme to the various departments. Also to consider the liability of these posts to be bear by the University after the end of the XII plan period. This matter is placed before the Syndicate for approval.**

**Note:**

University Grants Commission, New Delhi under XII Plan period sanctioned a sum of Rs.12.67 crores for the general development of our University. Out of this sanctioned grant a sum of Rs.5,06,80,000/- has been released and the said grant has to be distributed to various activities such as construction of buildings, equipments, books and salary to the staff to be appointed under this Plan period.

A sum of Rs.53.00 lakhs has been allotted to meet out the staff salary for the teachers to be appointed under XII plan scheme (**Annexure – 6 page no. 38** ). In order to utilize the grant sanctioned by UGC under staff salary, nine new teaching posts are to be granted under XII plan scheme. The liabilities to the said appointments is only up to the end of plan period of and thereafter the University has to meet out the liability (or) has to be obtained from the subsequent plan period of UGC.

**தீர்மானம்:**
**மேற்காண் பொருள்நிரலினை நிதிக்குழுவிற்கு சமர்ப்பித்து, நிதிக்குழுவின் தீர்மானத்தினை ஆட்சிக்குழுவிற்கு சமர்ப்பித்து, ஆட்சிக்குழுவின் தீர்மானத்தின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.**

**இனம் 25** **பெரியார் பல்கலைக்கழக உதவிப்பேராசிரியர்களுக்கு பல்கலைக்கழக மானியக்குழு வழிகாட்டுதலின்படி, கல்விநிலைத் தகுதி (CAS-AGP) ஊதியம் உயர்த்துதல் மற்றும் பதவி உயர்வு வழங்குதல் குறித்த 11.11.2016 அன்று நடைபெற்ற Screening Committee கூட்டத் தீர்மானங்கள் குறித்து ஆட்சிக்குழுவின் ஆலொசனை வேண்டுதல் - தொடர்பாக.**

குறிப்பு:

பெரியார் பல்கலைக்கழக பல்வேறு துறைகளைச் சேர்ந்த உதவிப்பேராசிரியர்களுக்கு பல்கலைக்கழக மானியக்குழுவின் கீழ்க்காணும் விதிமுறைகளின்படி பதவி உயர்வு வழங்குவதற்காக 11.11.2016 அன்று Screening Committee கூட்டம் நடைபெற்றது.

I. Minimum API scores using the PBAS scoring proforma developed by the concerned university as per the norms provided in Table IIA/II(B) of Appendix III.

II. At least three publications in the entire period as Assistant Professor (twelve years). However, in the case of College teachers, an exemption of one publication will be given to M. Phil. holders and an exemption of two publications will be given to Ph. D. Holders.

III. One course / programme from among the categories of methodology workshops, Training, Teaching-Learning-Evaluation Technology Programmes, Soft Skills development Programmes and Faculty Development Programmes of minimum one week duration.

IV. A selection committee process as stipulated in this regulation and in Tables II(A) and II(B) of Appendix III.

இந்நிலையில் கீழ்க்கண்ட உதவிப்பேராசிரியர்களுக்கு இணைப்பேராசிரியர் பதவி உயர்வு வழங்குவது குறித்தும் மற்றும் அடிப்படை ஊதியம் Rs.37400-67000+AGP Rs.9000/- உயர்த்துவதற்காக 11.11.2016 அன்று நடைபெற்ற Screening Committee கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்கள் துணைவேந்தர் அவர்களால் ஆட்சிக்குழுவில் சமர்ப்பிக்கப்படும்.

| வ. எண் | பெயர் மற்றும் துறை | வ. எண் | பெயர் மற்றும் துறை |
|---|---|---|---|
| 1 | Dr. R. Rajavel ,<br>Department of Chemistry | 9 | Dr. K. Anbarasu,<br>Department of Geology |
| 2 | Dr. A. Lalitha,<br>Department of Chemistry | 10 | Dr. R. Ramesh,<br>Department of Education |
| 3 | Dr. K. Krishnakumar,<br>Department of Commerce | 11 | Dr. M. Suriyavathana,<br>Department of Biochemistry |
| 4 | Dr. K. Prabhakar Rajkumar,<br>Department of Commerce | 12 | Mrs. M. Krishnaveni,<br>Department of Biochemistry |
| 5 | Dr. R. Vasanthamalai,<br>Department of Tamil | 13 | Dr. R. Parimalavalli,<br>Department of Food Science and Nutrition |
| 6 | Dr. J. Senthil Velmurugan,<br>Department of PRIMS | 14 | Dr. S. Thilagavathi,<br>Department of Food Science and Nutrition |
| 7 | Dr. T. Sarathy,<br>Department of PRIMS | 15 | Dr. H. Hannah Inbarani,<br>Department of Computer Science |
| 8 | Dr. P. Thirumoorthi,<br>Department of PRIMS | | |

எனவே, மேற்கண்ட ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு மற்றும் கல்வி நிலைத் தகுதி ஊதியம் உயர்த்துவது குறித்து வல்லுநர் குழு பரிந்துரையின் மீது நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஆட்சிக்குழுவின் ஆலொசனை வேண்டப்படுகிறது.

**தீர்மானம்:**

- **மேற்கண்டுள்ள அட்டவணையில் வரிசை எண். 12-இல் குறிப்பிட்டுள்ள உயிர்வேதியியல் துறை உதவிப்பேராசிரியர் திருமதி எம். கிருஷ்ணவேணி அவர்கள் முனைவர் பட்டம் பெறாத காரணத்தினால், அவர் முனைவர் பட்டம் நிறைவு செய்யும் நாளிலிருந்து தகுதி நிலை வழங்குவது குறித்து தேர்வுக்குழு அமைத்து (Selection Committee) நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனத் தீர்மானிக்கப்படுகின்றது.**

- **வரிசை எண்.1-இல் உள்ள வேதியியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் ஆர்.இராஜவேல், வரிசை எண். 3, 4, மற்றும் 9-இல் குறிப்பிடப்பட்டுள்ள வணிகவியல் துறை உதவிப்பேராசிரியர்கள் முனைவர் கே.கிருஷ்ணகுமார், முனைவர் கே. பிரகாகர் ராஜ்குமார் மற்றும் புவியமைப்பியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் கே. அன்பரசு, வரிசை எண்.14-இல் உள்ள முனைவர் எஸ்.திலகவதி, உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்துத் துறை ஆகியோர் பல்கலைக்கழக மானியக்குழுவின் விதிமுறைகள் பிற்சேர்க்கை-3, அட்டவணை 3-இல், வரிசை எண்.3-இல் தெரிவிக்கபட்டுள்ள தகுதிகளை பூர்த்தி செய்யாத காரணத்தினால் அவர்கள் உரிய தகுதிகளை நிறைவு செய்த பின்னர் தேர்வுக்குழு அமைத்து (Selection Committee) நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனத் தீர்மானிக்கப்படுகின்றது.**

- **வரிசை எண். 2, 5, 13 மற்றும் 15-இல் குறிப்பிடப்பட்டுள்ள உதவிப்பேராசிரியர்கள் முனைவர் ஆர்.வசந்தமாலை, முனைவர் ஏ.லலிதா, முனைவர் ஆர்.பரிமளவள்ளி மற்றும் முனைவர் ஹச்.ஹேனா இன்பராணி ஆகியோர் பல்கலைக்கழக மானியக்குழுவின் விதிமுறைகள் அறிவிப்பு நாள்: 01.02.2015, பத்தி எண். 4.3, 4.4. ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி ஒரு வாரத்திற்கான பயிற்சி வகுப்பினை அதாவது, 6 நாட்கள் (36 மணிநேரம்), நிறைவு செய்துள்ளமையால் அவர்களுக்கு தேர்வுக்குழு அமைத்து (Selection Committee) நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனத் தீர்மானிக்கப்படுகின்றது.**

- **வரிசை எண். 6, 7, 8, 10, மற்றும் 11 ஆகியனவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு, கூர்ந்தாய்வுக்குழுவின் (Screening Committee) பரிந்துரையின்படி அடுத்த நிலையான தேர்வுக்குழு (Selection Committee) நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனத் தீர்மானிக்கப்படுகின்றது.**

- **இப்பொருள்நிரல் விவாதத்தின்போது முனைவர் ஏ. லலிதா மற்றும் முனைவர் ஜெ.செந்தில்வேல்முருகன் ஆகியோர் விவாதத்தில் கலந்துகொள்ளவில்லை.**

| இதர இனம் 1 | **முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு முடித்துள்ள கீழ்க்கண்ட பட்டியலில் உள்ள முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கு கடந்த 14.10.2016 அன்று நடைபெற்ற 16-ஆவது பட்டமளிப்பு விழாவில் முனைவர் பட்டம் வழங்கியமைக்கு ஆட்சிக்குழுவின் பின்னேற்பு அனுமதி வேண்டுதல் தொடர்பாக.** |
|---|---|

குறிப்பு:

பெரியார் பல்கலைக்கழகம் மற்றும் இணைவுப்பெற்றக் கல்லூரிகளின் வாயிலாக முனைவர் பட்ட ஆராய்ச்சி மேற்கொண்டு வாய்மொழித்தேர்வு முடித்துள்ள கீழ்கண்ட 35 முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும் மாண்பமை துணைவேந்தர் அவர்களின் அனுமதி பெற்று தற்காலிகப் பட்டச்சான்றிதழ் வழங்கப்பட்டு, பிறகு 14.10.2016-ஆம் நாள் அன்று நடந்து முடிந்த 16-ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டச்சான்றிதழ் வழங்கப்பட்டது.

| Sl. No | Name of the Scholar | Name of the Department | Viva -Voce Date |
|---|---|---|---|
| 1. | B. Balachandran | Commerce | 31.08.2016 |
| 2. | S. Shahitha | Microbiology | 07.09.2016 |
| 3. | N. Anitha | Commerce | 15.09.2016 |
| 4. | C. Sivakkolundu | Economics | 16.09.2016 |
| 5. | Ali Mohammed Dar | Geology | 14.09.2016 |
| 6. | V.K.Evanjelene | Biotechnology | 23.09.2016 |
| 7. | G. Kandhakumar | Physics | 23.09.2016 |
| 8. | K. Prabhavathi | Mathematics | 27.09.2016 |
| 9. | K. Mariappa | Mathematics | 30.09.2016 |
| 10. | M. Vijayarakavan | Mathematics | 27.09.2016 |
| 11. | A. Karthika | Chemistry | 30.09.2016 |
| 12. | M. Prakash | Commerce | 19.09.2016 |
| 13. | A. Natarajan | Tamil | 23.09.2016 |
| 14. | P. Nallasivam | Management | 26.09.2016 |
| 15. | K.R.Jeya | Microbiology | 30.09.2016 |
| 16. | M. Sangeetha | Commerce | 28.09.2016 |
| 17. | M. Veerapagu | MIcrobiology | 30.09.2016 |
| 18. | K. Selvam | Biotechnology | 30.09.2016 |
| 19. | R. Subash Chandra Boss | Computer Science | 27.05.2016 |
| 20. | M. Kavitha | Tamil | 17.08.2015 |
| 21. | S. Selvamurugan | Chemistry | 11.04.2016 |
| 22. | G. Vidhyadharani | Microbiology - Molecular Biology (Interdisciplinary) | 04.11.2015 |
| 23. | P. Sugandhi | Microbiology | 25.04.2016 |
| 24. | S. Sasikumar | Management | 06.05.2016 |
| 25. | S. Balaraman | Tamil | 16.08.2016 |
| 26. | S. Deviranjitham | Commerce | 09.08.2016 |
| 27. | K. Paramasivam | Comp. Science | 12.08.2016 |

| | | | |
|---|---|---|---|
| 28. | L. Kannan | Commerce | 19.08.2016 |
| 29. | D. Ghayathry | English | 01.09.2016 |
| 30. | V. Radha | Commerce | 24.08.2016 |
| 31. | M. Kalaiarasi | Statistics | 08.09.2016 |
| 32. | S. Yazhini | Commerce | 31.08.2016 |
| 33. | M. Rehmath Jahan | Management | 06.09.2016 |
| 34. | M. Deepa | Food Science | 08.09.2016 |
| 35. | S.M.Alagappan | Commerce | 16.09.2016 |

மேற்கண்டுள்ள பட்டியலில் உள்ள 35 முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கு பட்டம் வழங்கியமைக்கு ஆட்சிக்குழுவின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**தீர்மானம்:**

**ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved).**

**இதர இனம் 2** **To consider hosting the 41st session of the Indian Social Science Congress by Periyar University in 2017 – Regarding.**

**Note:**

The General Secretary Prof. N.P. Chaubey of Indian Social Science Congress has consented to organize the 41st Indian Social Science Congress in Periyar University, in 2017.

Prof. B.M. Hegde, Padma Bhushan Awardee of 2010 is the present President of the Society. Prof. C.K. Raju a distinguished Mathematician will be the new President of the Congress and preside over the 41st Congress in Periyar University.

The University Grants Commission is providing Rs.20,00,000/- to Periyar University (host University) for this activity. Further, half of registration fee collected from the delegates of this 41st Congress can be utilized for TA and other incidental expenses.

Hosting, such prestigious Social Science Congress at the National level by Periyar University will be helpful to the Departments of Arts and Humanities and also to the University to create a Social Science Database and Network.

Considering these aspects, it is placed before the Syndicate for approval.

**தீர்மானம்:**

**ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved).**

**இதர இனம் 3** **முனைவர் M. அனுராதா, உதவிப்பேராசிரியர், இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை அவர்கள் பருவ விடுமுறை நாட்களில் (24.12.2016 முதல் 30.12.2016 வரை) குடும்ப பயணத்திற்காக பெரியார் பல்கலைக்கழகத்தின் பணப்பலன்கள் ஏதுமின்றி சொந்த செலவில் Lunkawi Island செல்ல அனுமதி வழங்குதல் தொடர்பாக.**

**குறிப்பு:**

முனைவர் M. அனுராதா, உதவிப்பேராசிரியர், இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை அவர்கள் 24.12.2016 முதல் 30.12.2016 வரை பருவ விடுமுறையில் குடும்ப பயணத்திற்காக பெரியார் பல்கலைக்கழகத்தின் பணப்பலன்கள் ஏதுமின்றி சொந்த செலவில் Lunkawi Island செல்ல அனுமதி வழங்க ஆட்சிக்குழுவின் அனுமதி வேண்டிச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

**தீர்மானம்:**

**ஒப்புதல் வழங்கப்பட்டது (Approved).**

| இதர இனம் 4 | **பெரியார் பல்கலைக்கழகத்தில் மூன்று ஆண்டுகள் பணிநிறைவுபெற்ற இணைப்பேராசிரியர்களுக்குப் பதவி உயர்வு வழங்க நிறைவேற்றப்பட்ட கூர்ந்தாய்வுக்குழுக் கூட்டத் தீர்மானம் (Screening cum Evaluation) மற்றும் தேர்வுக்குழுவின் (Selection Committee) தீர்மானங்களின் மீது ஆட்சிக்குழுவின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக.** |
|---|---|

குறிப்பு:

தமிழக அரசு ஆணை 350-இன்படியும், பல்கலைக்கழக மானியக்குழு விதிகள் (UGC-Career Advancement Scheme)-இன்படியும் மற்றும் 73-ஆவது ஆட்சிக்குழுக்கூட்டத் தீர்மானம் இனம் 52-இன்படியும், பெரியார் பல்கலைக்கழகத்தில் மூன்று ஆண்டுகள் பணிநிறைவுபெற்ற இணைப்பேராசிரியர்களுக்கு (CAS)-இன்படி 11.11.2016 அன்று கூர்ந்தாய்வுக் குழுக் கூட்டம் (**Screening cum Evaluation Committee**) நடைபெற்றது. அக்கூர்ந்தாய்வுக் குழுக் கூட்டத் தீர்மானத்தின் பரிந்துரை மற்றும் 16.12.2016 அன்று நடைபெற்ற **தேர்வுக்குழுக் (Selection Committee) கூட்டத் தீர்மானம்** ஆகியவைகளின் மீது ஆட்சிக்குழுவின் ஒப்புதல் வேண்டிச் சமர்ப்பிக்கப்படுகிறது. பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த இணைப்பேராசிரியர்களின் பெயர் பட்டியல் கீழ்வருமாறு:

| Sl. No | Name | Date of Joining | Date of completion of 3 years |
|---|---|---|---|
| 1 | Dr. K. Selvam<br>Associate Professor<br>Department of Botany | 05.08.13 | 4.08.16 |
| 2 | Dr. A. Murugan<br>Associate Professor,<br>Department of Microbiology | 05.08.13 | 04.08.16 |
| 3 | Dr. K. Dhanalakshmi<br>Associate Professor,<br>Department of Education | 05.08.13 | 04.08.16 |
| 4 | Dr. S. Venkatesan<br>Associate Professor<br>Department of Environmental Science | 05.08.13 | 04.08.16 |
| 5 | Dr. N. Radhakrishnan<br>Associate Professor<br>Department Library and Information Science | 06.08.13 | 05.08.16 |
| 6 | Dr. P. Thiruchenthil Nathan<br>Associate Professor & Head i/c.<br>Department of Zoology | 08.08.13 | 07.08.16 |
| 7 | Dr. G. Sudha<br>Associate Professor and Head i/c<br>Department of Biochemistry | 26.08.13 | 25.08.16 |

மேற்கண்ட கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்கள் துணைவேந்தர் அவர்களால் ஆட்சிக்குழுவில் சமர்ப்பிக்கப்படும்.

தீர்மானம்:

**மேற்காண் பொருள்நிரலினை நிதிக்குழுவிற்கு சமர்ப்பித்து, நிதிக்குழுவின் தீர்மானத்தினை ஆட்சிக்குழுவிற்கு சமர்ப்பித்து, ஆட்சிக்குழுவின் தீர்மானத்தின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.**